# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2159/10 - 2020 ජනවාරි මස 21 වැනි අඟහරුවාදා - 2020.01.21

*2159/10 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44(5) ஆம் அரசியலமைப்புக்கு அமைவாக எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மற்றும் அதியுத்தமராம் சனாதிபதியினால் "அமைச்சரவை அல்லாத அமைச்சருக்கு விடயங்கள் மற்றும் செயற்பாடுகளை மாற்றுதல்" எனும் தலைப்பின் கீழ் 2019.12.10 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவையினால் விடுக்கப்பட்ட 19/3391/201/005 ஆம் இலக்க அமைச்சரவை மசோதாவின் பிரகாரம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சராகிய என்னால் இங்கு கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சருக்குப் பொறுப்பளிக்கப்பட்ட விடயங்கள், செயற்பாடுகள், திணைக்களம், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனம் செயற்படுதல் வேண்டுமென்பதற்காக அரசியலமைப்பின் சட்டம் மற்றும் கட்டளைகள் போன்ற விடயங்களை இத்தால் மாற்றுகின்றேன்.*

*டக்ளஸ் தேவானந்தா (பா. உ.),*
*கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சர்.*




*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களம், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. கடல்நீர், உவர்நீர் (ஆற்று) மற்றும் நன்னீர் மீன்பிடித் தொழிலின் அபிவிருத்தியும் முகாமையும் | 1. தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை | • (1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க) இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டம் |
| 2. உயிருள்ள, உயிரற்ற தேசிய நீரக வள மூலங்களின் அபிவிருத்தி | 2. தேசிய நீரக வளமூலங்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் | • (1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) தேசிய நீரக வளமூலங்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனச் சட்டம் |
| 3. நன்னீர் மீன் வளர்ப்புப் பண்ணைகள், கருவாடு மற்றும் உலர் இறைச்சி தயாரிப்பு நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல் | | |
| 4. கடல் மீன் வளர்ப்பு உள்ளிட்ட நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தியும் கண்காணிப்பும் | | |
| 5. கடற்றொழில் சார்ந்த தொழில் முயற்சியை மேம்படுத்துவதற்காக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளை அறிமுகப்படுத்தலும், விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுடன் ஒருங்கிணைத்தலும் | | |
| 6. அலங்கார மீன் வளர்ப்பு வர்த்தகத்தை ஊக்குவித்தலுக்கான உதவிகளை வழங்குதல் | | |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.